REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 11உ வியாழன் (24—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 12உ வெள்ளி (25—3—55) [இதழ் 241

மானமே பெரிது!

கல்கத்தா, மார்ச் 23—

'வெளிநாடுகளிலிருந்து கல்கத்தாவில் இறக்குமதியாகும் சினிமாப் படங்களை தணிக்கை செய்வதற்கு, பம்பாய்க்கு அனுப்ப வேண்டும்," என்ற இந்திய சர்க்காரின் உத்தரவை எதிர்த்து; வங்கப் பிரதேச தணிக்கை குழுவினர் அத்தனை பேரும் தங்கள் ராஜிநாமாவைத் தாக்கல் செய்துவிட்டனர் என்று தெரிகிறது.

கூண்டோடு காங்கிரசில் சேர்ந்துவிடவா?

பிலிப்பைனிலும் கூட!

இந்தியர் வெளியேற உத்தரவு?

பிலிப்பைன் தீவுகளில் தற்காலிக சுற்றுப் பிரயாணிகள் (விசிட்டர்கள்) சம்மந்தமாக அமுலிலிருக்கும் குடியேற்ற சட்டங்களுக்கிணங்க, ஏராளமான இந்தியர்கள் பிலிப்பைனை விட்டு வெளியேறிவிடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று கிடைக்கப்பெற்ற அறிக்கை ஒன்றினைப் பற்றி, சர்க்கார் விசாரணை செய்து வருவதாகவும், இது சம்மந்தமாக இன்னும் சர்க்கார் யாரையும் அணுகவில்லை என்றும், டெல்லி மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

நாலரை கோடி டாலர் கடன்

இந்தியாவிற்கு அமெரிக்கா தருகிறது

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக அமெரிக்காவிடமிருந்து 4 கோடியே 50 லட்சம் டாலர் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியத் தூதுவர் ஜி. எல். மேதா கையெழுத்திட்டுள்ளார் என்று தெரிகிறது.

அப்போது அவர், "இந்தியா, உறுதியானதொரு ஜனநாயகப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்வதற்காக, அமெரிக்கா ஒப்பற்ற உதவிபுரிந்து வருகிறது," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எதிர்கால அரசியல் நிலை என்ன?

பெரியாரிடம் கலந்து பேசினர்

திராவிட பார்லிமெண்டரிகட்சியினர் நடவடிக்கை

(தனி நிருபர்)

சென்னை, மார்ச் 24—

திராவிட பார்லிமெண்டரி கட்சியினர், தங்கள் எதிர்காலத் திட்டம் எப்படி இருக்கவேண்டும் என்று தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

சட்ட சபைக்குள் இயங்கிவரும் மேற்படி கட்சியின் உறுப்பினர்கள், பல ஆண்டுகளாகவே நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், தமிழர் இயக்கம், திராவிட இயக்கம் ஆகியவற்றுடன் குறிப்பிடத் தக்க அளவு தொடர்பு கொண்டவர்கள் என்பதும், கடந்த தேர்தலின்போது திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவைகளின் ஆதரவைப் பெற்றவர்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே.

சட்ட சபையில், திராவிட பார்லிமெண்டரி கட்சியாக இயங்கும் ஏற்பாட்டுக்கு பெரியாரின் ஆலோசனையும், சம்மதமும், ஆதரவும் பெறப்பட்டதாக, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் கூறினர்—கூறியும் வருகின்றனர்.

திராவிட பார்லிமெண்டரி கட்சி, இனி சட்ட சபைக்கு வெளியிலும் பணியாற்றுவது—அடுத்த தேர்தலில் திராவிட பார்லிமெண்டரி கட்சியின் பெயராலே ஈடுபடுவது—என்பது, இப்போது அவர்கள் கொண்டுள்ள எண்ணமாகும்.

"திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தேர்தலில் ஈடுபடாமலிருப்பதாலேயே, தாங்கள் தனியாக ஒரு கட்சி அமைத்துத் தேர்தலில் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது,"—என்று கூறுகிறார்கள்.

இந்தக் கருத்துக்கு பெரியாரின் சம்மதமும், ஆதரவும் கிடைக்குமா என்று அறிவதே திராவிட பார்லிமெண்டரி கட்சியின் முதல் நடவடிக்கை ஆகும்.

காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் என்ற முறையிலும், திராவிடரின் நலனுக்கு ஆதரவாளர்கள் என்ற முறையிலும், பெரியாரின் பேராதரவு பெறும் உரிமை தங்களுக்கு முழுக்க முழுக்க இருக்கிறது என்ற நம்பிக்கையுடனேயே திராவிட பார்லிமெண்டரி கட்சி இருக்கிறது.

ஆனால், சின்னாட்களுக்கு முன்பு நடைபெற்ற இடைத் தேர்தல்களில், திராவிடர் கழகம் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்ததும், பொதுவாகவே காமராசர் மந்திரி சபைக்கு ஆதரவு அளிப்பதும், திராவிட பார்லிமெண்டரி கட்சியினருக்கு சந்தேகத்தையும், பயத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தி விட்டிருக்கிறது.

எனவே, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் இரு கிழமைகளுக்கு முன்பு ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தி, பெரியாரிடம் கலந்து பேசுவது என்று முடிவு செய்தனர்.

திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் சமரசப்படுத்துவது என்பதும், திராவிட பார்லிமெண்டரி கட்சியின் திட்டத்தில் ஒரு பகுதியாகும்.

திராவிட பார்லிமெண்டரி கட்சியின் இந்தத் திட்டம் பற்றி, முதலில் திராவிடர் கழகக் கருத்தை அறிந்துகொண்டு, பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கலந்து பேசலாம் என்று முடிவு செய்தனர்.

இந்தத் திட்டத்தின்படி, நேற்று (23-3-55) திராவிட பார்லிமெண்டரி கட்சியைச் சார்ந்த தோழர்கள் வி. வி. இராமசாமி, சுயம்பிரகாசம், ரத்தினசாமி ஆகியோர் பெரியாரைச் சந்தித்துப் பேசினர்.

எதிர்கால அரசியலில் தாங்கள் எப்படி நடந்துகொள்வது? தேர்தலில் காங்கிரசை, எதிர்த்துப் போட்டியிடுவதா? அப்படிச் செய்யும்போது தங்கள் திராவிடர் கழகத்தின் ஆதரவு கிடைக்குமா? இடைத் தேர்தல்களில் காங்கிரசை ஆதரித்தது போலவே, அடுத்து வருகிற பொதுத் தேர்தலிலும், காங்கிரசை ஆதரிக்கும் போக்கிலே திராவிடர் கழகம் இருந்துவிடுமா? அப்படி நேரிட்டுவிட்டால், காங்கிரஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆந்திராவில் மந்திரி சபை

மார்ச் 28-ல் பதவி ஏற்கும்?

மார்ச் 28-ந் தேதியன்று ஆந்திராவில் ஏழு பேர் கொண்ட மந்திரி சபை திரு. பி. கோபால் ரெட்டி தலைமையில் பதவி ஏற்கும் என்று தெரியவருகிறது.

அந்த மந்திரி சபையில் காளா வெங்கட்ராவ், , என். சஞ்சீவி ரெட்டி, கே. சந்திரமௌலி, டி. சஞ்சீவய்யா, ஜி. லட்சண்ணா, என். வி. ராமா ராவ் ஆகியோர் இடம் பெறுவர் என்றும், அடுத்த சில நாட்களில் மேலும் இருவர் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிய வருகிறது.

பின்னர் சேர்க்கப்படும் இருவரில் ஒருவர், பிரஜா கட்சிப் பிரதிநிதியாயிருப்பர் என்று தெரிகிறது.

இந்தியாவில் இவ்வாண்டில் மொத்தம் 5,70,000 சைக்கிள்கள் உற்பத்தியாகலாமென்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், அடுத்த ஆண்டில் இவ்வுற்பத்தி மேலும் 8 லட்சத்திற்கு எட்டும் என்றும், மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

சொல்வேறு-செயல்வேறு!

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி நேரு

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு மக்கள் திட்டம்; அனைவருக்கும் உணவு, வேலை, உடை, உறைவிடம் அளிப்பதுதான் அதன் நோக்கம்; சர்க்காரும், மக்களும் கூட்டாக முயற்சியெடுத்து வேலை செய்தாலல்லாமல் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட்டு வெற்றி அடைய முடியாது;

"அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தை வகுப்பதில் கிராமப் பஞ்சாயத்துக்கள், பொதுமக்கள் ஆகியோரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள அவா கொண்டுள்ளேன்; பாரபட்சமில்லாமல் மக்களனைவரும் முன்னேற்றமடைய சம சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் மனதிலிருத்திக்கொள்ள வேண்டும்."

—இவ்வாறு, அலகாபாத்திலிருந்து 50 கல் தொலைவிலுள்ள ஒரு இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய பிரதமர் நேரு கூறியுள்ளார்.

கேட்டதோ ரூ. 3 லட்சம் அனுமதித்ததோ ரூ. 38,000

தீண்டாமை ஒழிப்பில் இந்தியப் பேரரசின் அக்கரை!

'ஏக இந்தியா'க்காரர்களுக்குப் புரியுமா?

புதுடில்லி, மார்ச் 23—

"தீண்டாமை ஒழிப்பு சம்பந்தப்பட்ட திட்டங்களுக்காக சென்னை மாநில சர்க்கார், மத்திய சர்க்காரிடம் ரூ 2,99 000 மானிய உதவி கேட்டது. ஆனால், அந்திட்டத்திற்கு, மத்திய சர்க்காரால் மானியமாக அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 38,000 ஆகும்,"

என்று, டெல்லி மக்கள் சபையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரு உதவி அதிகாரிகள், அவர்களுக்கு இரு உதவியாளர்கள் நியமித்தல், 13 மாவட்டங்களில் மாதாந்திர இதழ் ஆரம்பித்தல், சிறப்பான சேவைபுரியும் கிராமத் தலையாரிகளுக்கும் மற்றையோருக்கும் பரிசு வழங்கல் நல்ல சிறு கதைகளுக்கு ஆண்டுதோறும் போட்டிவைத்து பரிசு வழங்குதல், கிராமக் கிணறுகள், பாதைகளைச் சீர்செய்தல், மாணவர்களுக்கு பல தரப் படிப்புக்காக உபகாரச் சம்பளம் தருதல் முதலியன சென்னை சர்க்காரின் தீண்டாமை ஒழிப்புத் திட்டங்களில் இடம் பெற்றிருந்தன.

அத்தியாவசியப் பொருட்களில் கட்டுப்பாடு: மசோதா நிறைவேற்றம்

புதுடில்லி, மார்ச் 22—

அத்தியாவசியப் பொருள் மசோதா, தனிக் குழு ஒன்றின் சிபாரிசுடன் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டது. இம்மசோதாவின்படி, சிற்சில அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தி, வினியோகம், வர்த்தக சம்பந்தமான கட்டுப்பாடுகள் முதலியன ஏற்படுத்த சர்க்கார்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது.

நகரசபை வரவேற்பில் ஈ.வெ.கி. சம்பத்

13-3-55-ல், வேலூர் (வ. ஆ.) நகராட்சி மன்றத்தார், தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களுக்கு ஒரு வரவேற்பளித்தனர். நகராட்சித் தலைவர் திரு. சீதாபதி அவர்கள் வரவேற்பு இதழை வாசிப்பதைக் காணலாம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24—3—'55 வியாழன்

தெளிவேற்படவில்லை

பாகிஸ்தான் — இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்ந்த முஸ்லீம் இன மக்களின் சுதந்திரமான நிரந்தர நல்வாழ்விற்காக, காலஞ்சென்ற ஜின்னு அவர்களால் போராடிப் பெறப்பட்ட பூமி!

'ஏக இந்தியா'க்காரர்களின் ஏகாதிபத்திய ஆசைக்கு குழி பறித்தது, 'என் இன மக்கள் விடுதலையுடன் வாழ தனிநாடு தேவை,' என்று கூறிய 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்னும் உரிமைக் குரல்.

ஜின்னு அவர்கள் எழுப்பிய அந்த உரிமைக் குரலுக்குப் பின்னல் ஏழேமுக்கால் கோடி முஸ்லீம் இன மக்களின் விடுதலை வேட்கை, பொங்கி நின்றது. அதன் விளைவாக, 'ஆகாது, கூடாது' என்று ஆர்ப்பரித்தவர்களின் ஒப்புதலுடனேயே 'பாகிஸ்தான்' பூகோளப் புத்தகத்தில் இடம் பெற்றது.

'பாகிஸ்தான்', இந்திய அரசியல் அமைப்பிலிருந்து துண்டித்துக் கொண்டு தனியாக உலகத்து நாடுகளுள் ஒன்றாக இடம் பெற்றது, எந்த வகையாலும் வெகு நியாயமானதே என்பதை இன்றும் எவரும் மறுத்துவிட முடியாது.

ஆனால், பாகிஸ்தான் உருவான 1947-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை கடந்த எழரை ஆண்டு காலமாக, அந்த நாட்டு மக்கள் எத்தகைய ஒரு அரசியல் முறையால் தங்களை ஆண்டு கொள்ள வேண்டும் என்பதை நிர்ணயித்துக்கொள்ளாதவர்களாக — நிர்ணயித்துக்கொள்ள இயலாதவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

'இன்னும் தெளிவேற்படவில்லை; அரசியல் நிலை குழப்பம் நிறைந்ததாயும், பாகிஸ்தான் நாட்டு மக்களின் எதிர்கால நல்வாழ்வு இருள் சூழ்ந்ததாயுமே இருந்து வருகிறது, என்று கூறுகிற நிலை நீடித்துக் கொண்டே செல்கிறது.

காலஞ் சென்ற ஜின்னு, லியாகத் அலிகான் போன்றவர்களுக்குப் பிறகு, பாகிஸ்தான் நாட்டில் இன்று, நாடு முழுவதுமாக மக்களிடை செல்வாக்குப் பெற்ற பெரும் அரசியல் தலைவர்கள் இல்லாததும், இருக்கிற தலைவர்களிடத்தில், பாகிஸ்தான் நாட்டு மக்களின் எதிர்கால நல்வாழ்வில் இருக்க வேண்டிய அக்கரையைக் காட்டிலும், தங்கள் தங்களிடமே அதிகாரம் இருக்கவேண்டும் என்ற அதிகார அரசியல் வெறி நிறைந்திருப்பதும் இன்று பாகிஸ்தானில் நிலவி வரும் தெளிவில்லாத அரசியல் நிலைக்கான காரணங்களுள் முக்கியமானவையாகும் என்று நாம் முன்பொரு முறை எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

மேலும் ஒரு நாட்டு மக்களின் அரசியல் விழிப்புணர்வும், திட்டமான தெளிவும், 'ஜனநாயகம் என்றால் என்ன?' என்பதற்குரிய நியாயமான முழுப் பொறுப்புணர்ந்து கொண்டிருக்கும் நிலையும்கூட ஒரு நாட்டு அரசியல் நிலை மாற்றங்களுக்குக் காரணமாக இருக்க முடியும். அந்த வகையில் இப்போதுள்ள குழப்பமான நிலையில் அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை நிர்ணயிப்பதற்குத் தேவையான அளவு, அரசியல் தெளிவும், ஜனநாயக எண்ணம் வேரூன்றிய உள்ளமும் கொண்டவர்களாக பாகிஸ்தான் மக்கள் முழுவதும் இருக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது.

கடந்த அக்டோபரில் பாகிஸ்தான் கவர்னர் - ஜெனரல், 'நமக்கு இன்ன வகையான அரசு முறைதான் வேண்டும்,' என்பதை நிர்ணயிக்கக்கூடிய அரசியல் நிர்ணயசபையை பல காரணங்களுக்காகக் கலைத்ததும், பின் அந்த சபையின் தலைவராயிருந்த மௌல்வி தமீஜுதின்கான், சிந்து பிரதம நீதிமன்றத்தில் கவர்னர்-ஜெனரலின் 'கலைப்பு நடவடிக்கை'யை எதிர்த்து வழக்காடி, சாதகமாகத் தீர்ப்புப் பெற்றதும், அந்த தீர்ப்பை எதிர்த்து, பாகிஸ்தான் அரசாங்கம் லாகூரில் உள்ள, 'பெடரல்' நீதிமன்றத்தில் 'அப்பீல்' செய்து, 'சிந்து நீதிமன்றத்திற்கு இது போன்ற பிரச்சினைகளை விசாரிக்கும் அதிகார வரம்பு இல்லை' என்ற தீர்ப்பினைப் பெற்றிருப்பதும் செய்திகளாக நமக்குத் தரப்பட்டுள்ளன.

இதற்கிடையில் சிந்து சட்டசபைத் தலைவர் மீர்குலாம் அலிகான் தால்பூர் இன்னும் சிலருடன் சேர்ந்து, சிந்து மாநில அமைச்சர்களைக் கொன்று, நாடு முழுவதும் பரவலாக குழப்பம் விளைவிக்கச் சதி செய்தார்கள் என்றும், அந்தச் சதி, தக்க சமயத்தில் துப்பறியப்பட்டு, சதியிலீடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றும் செய்திகள் வந்துள்ளன.

இப்படி, பாகிஸ்தானில் குழப்பத்திற்கு மேல் குழப்பம் தொடருவது, பாகிஸ்தான் மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கான நம்பிக்கையில் தெளிவேற்படவில்லை என்பதைச் சொல்கின்றன, நமக்கு.

தொழிலாளருக்கு குடியிருப்பு வசதி!

புதுடில்லி, மார்ச் 22—

மராமத்து, குடியிருப்பு வசதி வினியோக இலாகாவின் மானியக் கோரிக்கை மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேற்படி மானியக் கோரிக்கை ரூ. 46 கோடியாகும்.

தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்வதில் முன்னேற்றம் மிக 'மந்தமாக' இருப்பதாக சபையில் புகார் கூறப்பட்டது.

மேலும் வினியோக இலாகாவில் சொந்தக்காரர் சலுகை அதிகமாக மலிந்து காணப்படுகிறது என்றும் உறுப்பினர் ஒருவர் குறை கூறினார்.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் சுவரண்சிங், தொழிலாளருக்கு குடியிருப்பு வசதி தருவது சம்மந்தமாக மாநில சர்க்கார்களின் திட்டங்களைக் கவனிப்பதில் மத்திய சர்க்கார் காலதாமதம் செய்வது கிடையாது என்றும், குறைந்த வருமானம் உடையவர்களுக்கும் வீட்டு வசதி செய்துகொடுக்கும் திட்டம் இப்போதுதான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறியிருக்கிறார்.

சேரிகளில் வாழும் மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவும் இத்திட்டத்தை மாநில சர்க்கார்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும், இது சம்பந்தமாக மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களிடையே ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களை மாநில சர்க்கார்கள் சரிவர அமுலுக்குக் கொண்டுவரவில்லை என்றும், அதுபோன்றே தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சட்டமும் அமுல் நடத்தப்படவில்லை என்றும் பல உறுப்பினர்களால் எடுத்துக்காட்டப்பட்டது.

விலைவாசிகள் வீழ்ச்சி

மத்திய சர்க்காருக்கு சென்னையின் யோசனை

சென்னை, மார்ச் 22—

விவசாயப் பொருட்களின் விலை உறுதிப்படுவதற்காக, கடன்களை தாராளமாக வழங்குமாறு பாங்குகள், கூட்டுறவு சங்கங்களுக்கு ரிசர்வ் பாங்கு தாக்கீது அனுப்ப வேண்டும் என மத்திய அரசாங்கத்திற்கு யோசனை கூறி சென்னை அரசாங்கம், கடிதம் எழுதியிருப்பதாக, கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் கூறியிருக்கிறார்.

மேலும், விலைவாசிகள் நிலைமை அரசாங்கம் கவனித்து வருவதாகவும், அதற்கான குழு ஒன்று வாராவாரம் நிலைமையைப் பரிசீலித்து வருவதாயும் மந்திரியார் கூறியிருக்கிறார்.

இராவணன் ஒரு 'பார்ப்பனன்'!

அதைக் கூறிய பிள்ளைக்கு பரிசு ரூ. 815!

தூத்துக்குடி, மார்ச் 22—

"சமய எதிர்ப்பாளர்கள் இராவணனையும், சூர்ப்பனகையையும். தாடகையையும் புகழ்கின்றனர், பக்தர்கள்—எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பவர்கள். இராவணன் ஒரு பார்ப்பான்; அவனைக் கொன்ற பாவம் தீர இராமபிரான் இராமேசுவரத்தில் பூசை செய்தார்."

இவ்வாறு இத்திங்கள் 14-ந் தேதியன்று இரவு, தூத்துக்குடியில் நடைபெற்ற 'இராமாயண பட்டாபிஷேக விழா'வில் தலைமை வகித்துப் பேசிய 'தொண்டன்' பத்திரிகை ஆசிரியரான கே. ஆறுமுக நாவலர் குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த ஒரு மாத காலமாகவே இங்குள்ள தோல் வியாபாரியான ஆர். இராமசாமி அய்யர், வி. சுப்பிரமணிய அய்யர் ஆகியவர்கள் முயற்சியால், 'கம்பன் கவிமணிச் செல்வ'னை இராமகிருஷ்ண பிள்ளையால் இராமாயண சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

இவ்விழாவின்போது சொற்பொழிவுகள் நடத்துவதற்கான முயற்சிகளைச் செய்த ஆர். இராமசாமி அய்யர், திரு இராமகிருஷ்ண பிள்ளைக்கு ரூ. 815 அன்பளித்திருக்கிறார்.

புதுடில்லி, மார்ச் 22—

சென்னை மாநிலத்தில் இதுவரை ஒழிக்கப்படாத இனும்கள் சம்மந்தமாகவும் சட்டம் இயற்றும்படி சென்னை சர்க்காரை, திட்டக் குழு வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

போதனு மொழியாக தமிழ்

நிதி அமைச்சர் சுப்பிரமணியம் விளக்கம்

"சென்னை மாநிலத்தில் மலையாளிகளும் கன்னடியர்களும் இருக்கும்போது அவர்களை 'அன்னியர்'களைப் போல் நடத்த முடியாது. அவர்கள் 'அன்னியர்கள்' என்று கருதப்படும்படியும் ஒன்றும் செய்துவிடக் கூடாது. இதனுல்தான் தமிழை நிர்வாக மொழியாக்க முடியவில்லை இதற்காக, நான் தமிழ் மொழியில் குறைந்த பற்றுள்ளவன் என்று கருதிவிடக் கூடாது.

"தமிழை ஆட்சி மொழியாக்கிய பிறகே போதனு மொழியாக்க முடியும் என்று நிபந்தனை போடுவது சரியல்ல. பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியைப் போதனு மொழியாக்குவதில் இனியும் தாமதம் கூடாது. ஆனுல் இதனை, சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையாக்க நான் விரும்பவில்லை: சர்ச்சைகளேதும் இல்லாமலேயே காரியங்களனைத்தும் நடைபெறும் என்று நினைக்கிறேன்.

"புதிதாக ஆந்திரத்தில் ஏற்பட்டுள்ள சர்க்காருடன் வெகு விரைவில் எல்லைத் தகராறு பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் மூன்றுவது ஆள் ஒருவரின் தலையீடு இல்லாமலேயே ஆந்திராவில் இப்போது ஏற்பட்டுள்ள நிர்வாக அமைப்பின் சூழ்நிலைகளுக்கேற்ப எல்லைத் தகராறு மட்டுமல்லாமல் எல்லாப் பிரச்சினைகளையுமே தீர்த்துவிடலாம் என்று நம்புகிறேன். திரு—கொச்சி தமிழ்ப் பிரதேசங்கள் பற்றி, அதுபற்றிய குழுவின் அறிக்கை வரும் வரை காத்திருக்கவேண்டும்."

இவ்வாறு நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், சென்னை சட்டசபையில், கவர்னர் — அமைச்சர்கள் ஆகியோரின் சம்பள மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில், குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், மந்திரிகளாக இருப்பவர்களுக்குக் கட்சிப் பொறுப்புகளும் உள்ளனவென்றும், கட்சித் தொடர்பை அறுத்துக் கொள்வது ஜனநாயக முறையில் சாத்தியமானதோ, உகந்ததோ அல்ல என்றும், பிறருக்கு முன் மாதிரியாகவே கூடியவரையில் மந்திரிகளின் நடத்தையும் இருக்குமென்றும் கூறினார்.

சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கவேண்டுமென்றும், அத்தமிழ் நாட்டில் கன்னட மாவட்டம் ஒன்றும், மலையாள மாவட்டம் ஒன்றும் இருந்து விடுவதாலேயே இதை 'சென்னை மாநிலம்' என்றுதான் அழைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் தோழர் விநாயகம் கூறினதற்குப் பதிலளிக்கும் வகையில் நிதி அமைச்சர், 'சென்னை' என்ற பெயர், சரித்திரத் தொடர்பைக் காட்டுவதால் 'சென்னை மாநிலம்' என்ற பெயரை 'தமிழ் நாடு' என்று மாற்றவேண்டியது அவசியமற்றது என்று கூறியிருக்கிறார்.

விவாதத்தின்போது தோழர் டி. சண்முகம் குறிப்பிட்டதாவது:

"ஆசிரியர்களுக்குத் தரப்படும் 'பென்ஷன்' பணம், அவர்களுக்குத் தரப்படும் சம்பளத்தில் பாதியாக இருக்கவேண்டும்; மேலும் சென்னை மாநில சர்க்காரில் இப்போதுள்ள மந்திரிகளின் எண்ணிக்கையே போதுமானதாகும். உதவி அமைச்சர்களோ, பார்லிமெண்டரி காரியதரிசிகளோ தேவையில்லை."

பின்னர் தோழர் எ. கோவிந்தசாமி பேசுகையில், கவர்னர் சம்பளத்தைக் குறைக்க அரசியல் சட்டத்தைத் திருத்த சிபாரிசு செய்ய வேண்டுமென்றும், மந்திரிகளும் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும எடுத்துக் கூறினார்

தோழர் சுயம்பிரகாசம் பேசுகையில், ரெவினியூ போர்டால் வீண் பணச் செலவுதான் ஆகிறதே தவிர, அதனுல் ஒரு பயனும் கிடைக்காததால் அதனை ரத்து செய்துவிட வேண்டுமென்றும்; பெண்கள் க்ஷேமலக் குழுவிற்கு ஆகும் பணச் செலவால் கிராமப் பகுதிகளிலும் நன்மை கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

கைத்தறி நெசவாளர் பிரச்சினை

சென்னை சர்க்கார் நிலை விளக்கம்

கைத்தறி நெசவாளர்களை, கைத்தொழில் கூட்டுறவுக்குள் கொண்டு வரும் திட்டம் பற்றி சட்டசபையில் சில கேள்விகள் கேட்கப்பட்டன. கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசிய தொழிலமைச்சர் பக்தவத்சலம், மலையாளத்தில் இரண்டு நெசவாளர் நிறுவனங்களையும், மதுரை மோகன்ராம் கைத்தறி நிறுவனத்தையும் கைத் தொழில் கூட்டுறவுக்குள் கொண்டுவரும் திட்டத்தை மத்திய சர்க்கார் அங்கீகரித்துள்ளனரென்றும், இத்திட்டத்திற்காக மலையாள நிறுவனங்களுக்கு ரூ. 1,12,302—8—0-ம், மதுரை நிறுவனத்திற்கு ரூ. 42,237—8—0-ம் வட்டியில்லாத கடனுகத்தர மத்திய சர்க்கார் ஒப்புதல் தந்துள்ளதென்றும், இம் மூன்று திட்டங்களையும் அமுல் நடத்த உத்திரவிடப்பட்டு, அதைக் கூட்டுறவு இலாகா ரெஜிஸ்திரார் கவனித்து வருவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதையும் சர்க்கார் கவனிக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

'ஆகும் நெறி'யின் அரிய சாதனை!

வாஷிங்டன், மார்ச் 22—

"உலகின் எந்த ஒரு பகுதிக்கும் இரண்டு மணி நேரத்தில் போய்ச் சேரக்கூடிய 'கிளைடர்' விமானங்களை நிர்மாணிப்பது ஆகக்கூடிய காரியம்தான்" என்று பறக்கும் குண்டு நிபுணர் டாக்டர் டார்னே பெரிகர் கூறுகிறார்.

இந்தக் 'கிளைடர்' செங்குத்தாக 40 மைல் உயரம் பாய்ந்து ஏறி அங்கிருந்து குறித்த இலக்கில் நொடியில் போய் இறங்கிவிடக் கூடுமாம்!

பதிலுக்குப் பதில்!

லண்டன், மார்ச் 21—

கிழக்கு ஐரோப்பாவில் எட்டு கம்யூனிஸ்டு நாடுகள் சேர்ந்த கூட்டு ராணுவ முகாம் அமைப்பது பற்றி பூரணமான உடன்பாடு ஏற்பட்டு விட்டதாக மாஸ்கோ வானொலி இன்று அறிவித்தது.

ஆயுதபாணியாக்கப்பட்ட மேற்கு ஜெர்மனி உள்ளிட்ட மேற்கத்திய பாதுகாப்பு நிறுவனத்தை அமைப்பது என்கிற மேற்கு வல்லரசுகளின் நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கையே மாஸ்கோ அறிவிப்பாகும்.

இந்தியாவுக்கு அமெரிக்க கடன் உதவி

இந்தியாவின் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்க சர்க்கார் இந்தியாவுக்கு 6 கோடி டாலர் ஒதுக்கியுள்ளது. அந்தத் தொகையில் ஒரு பகுதியைக் கடனுகவே தரவேண்டுமென்றும், அத்தொகை முழுவதையும் மானியமாகவே தந்துவிடக் கூடாது என்றும் அமெரிக்கச் சட்டம் தெரிவிக்கிறது.

அத்தொகையில் 4 கோடி டாலர் (ரூ. 18 கோடி)களை, இன்று அமெரிக்கா கடனுக அளித்துள்ளது. இது சம்மந்தமான ஒரு ஒப்பந்தம் வாஷிங்டனில் கையெழுத்திடப்பட்டது.

இதுவரை அமெரிக்கா இந்தியாவுக்கு அளித்துள்ள கடன் தொகைகளில் இதுவே மிகப்பெரிய தொகையாகும்.

ரூர்கேலா எஃகுத் தொழிற்சாலை

புதுடில்லி, மார்ச் 21—

ரூர்கேலா எஃகுத் தொழிற்சாலை அமைப்பு சம்பந்தமான இறுதி அறிக்கையை 'க்ரூப்-டிமாக்' தொழில் நிறுவனம் சமர்ப்பித்துள்ளது என்றும், முதலில் திட்டமிட்டபடி அத்தொழிற்சாலையை ஆரம்பத்தில் 5,00,000 டன் உற்பத்தி செய்யக்கூடியதாக அமைத்து, பின்னர் அதன் உற்பத்திச் சக்தியை இரட்டிப்பதற்குப் பதிலாக, ஆரம்பத்திலேயே அதை 10,00,000 டன் உருக்குக் கட்டிகளை உற்பத்தி செய்யக்கூடியதாக அமைக்க இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருப்பதால், அத்திட்டத்தை 'க்ரூப்-டிமாக்' நிறுவனம் மறுபடியும் பரிசீலித்து வருகிறது என்றும் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி மக்கள் சபையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

தொழில் நுணுக்கக் கல்வி

அ. இ. குழுத் திட்டம்— சென்னையின் அங்கீகாரம்

தொழில் நுணுக்கக் கல்விக்கான அகில இந்தியக் குழுவின் திட்டத்தை அண்மையில் சென்னை சர்க்கார் ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

சென்னை மத்திய பாலிடெக்னிக் அச்சுத் தொழில் பகுதியை, பிரதேசப் பள்ளியாக மாற்றவும், சென்னை, ஆந்திரா, குடகு, மைசூர், ஐதராபாத், திரு—கொச்சி ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதில் பயிற்சி அளிக்கவும் யோசனை கூறப்பட்டுள்ளது.

இதுவரையிலும் சென்னை சர்க்கார், இயந்திர சாதனங்களுக்கும், உபகரணங்களுக்கும் மொத்தம் ரூ. 3,13,235 செலவழித்துள்ளதென்றும், மேலும் மொத்தமாக ரூ. 2,37,000-மும், ஆண்டுச் செலவிற்கு ரூ. 51,785-ம் அனுமதித்துள்ளதென்றும் தெரியவருகிறது.

பரீட்சை எழுதுவோர் தொகை

இந்த ஆண்டு அதிகரித்துள்ளது

சென்னை, மார்ச் 21—

எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதியவர்களின் எண்ணிக்கை, 1954-ம் ஆண்டில் 53,307 ஆக இருந்தது. இந்த ஆண்டு 57,000 ஆக உயர்ந்துள்ளது என்று தெரிகிறது.

ஆனால் பரீட்சை நடைபெறும் இடங்கள் சென்ற ஆண்டு 500 ஆக இருந்தது—இந்த ஆண்டு 362 ஆகக் குறைந்துள்ளதாம்.

மொத்தம் 820 பள்ளிகளிலிருந்து இந்தப் பரீட்சைக்கு மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

பரீட்சையில் தேறும் அத்தனை பேரும், கல்லூரிகளில் சேர்ந்து மேல்படிப்பு படிப்பதில்லை.

சென்ற ஆண்டு தேர்வு பெற்ற 38,000 மாணவர்களில் 16,000 பேர் மட்டுமே—அதாவது பாதிக்கும் குறைவாகவே கல்லூரிகளில் சேர்ந்தனர் என்று தெரிகிறது.

எச்சரிக்கை !

சைகோன், மார்ச் 21—

தெற்கு வியட்நாமிலுள்ள காவ் டாயி வகுப்பினரின் 'போப் பாண்டவ'ரும், 5 தனிப்பட்ட இராணுவங்களின் ஜெனரல்களும், பிரதமர் நகு-தின்-தியமை, இன்னும் 5 தினங்களுக்குள் தமது மந்திரி சபையைத் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டுமென எச்சரித்துள்ளனராம்.

அந்த எச்சரிக்கை குறிப்பில், நாட்டின் பாதுகாவலுக்காக ஐக்கிய தேசிய இராணுவ முன்னணி அமைக்க வேண்டுமென்றும், தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க ஜனநாயகத் தன்மை வாய்ந்ததும், அசைக்க முடியாததுமான தேசிய ஐக்கிய சர்க்கார் வேண்டுமென்றும் காணப்படுகிறது.

சிந்திரியிலிருந்து 'அம்மோனியம் சல்பேட்' உரம்

1954-ம் ஆண்டில், மொத்தம் 3,10,604 டன் 'அம்மோனியம் சல்பேட்' உரம் சிந்திரியிலிருந்து பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டதென்றும், அவ்வாண்டில் மொத்தம் 200 டன் 'அம்மோனியம் சல்பேட்' உரம் நேப்பாளத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்றும், உற்பத்தி மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் வெளியிட்டார்.

ஆபத்தானவையாம் !

"ரஷ்யர்களின் வழி முறைகளை விட சீனக் கம்யூனிஸ்டுத் தலைவர்களின் வழி முறைகள் மிக மிக ஆபத்தானவை — யுத்தத்தைத் தூண்டுபவை"

என்று, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ் கூறியிருக்கிறார்.

நான்கு அன்னியர்கள் கைது

மைசூர், மார்ச் 20—

இந்தோனேஷியாவைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் நான்கு அன்னியர்களை ஒரு திருட்டு வழக்கு சம்பந்தமாக நகர போலீசார் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

முகம்மது, முஸ்தபா, கலீல் முஸ்தபா, அமூர் என்பது தங்கள் பெயரெனவும். தாங்கள் சென்னை மைலாப்பூரில் வசிப்பவர்கள் என்றும் அவர்கள் போலீசாரிடம் கூறினராம்.

இவர்களில் மூவர், கடந்த ஜனவரி 26-ந் தேதியன்று தனது ஜவுளிக்கடைக்கு வந்திருந்ததாயும், பணம் எண்ணுவதில் தான் மும்முரமாயிருந்தபோது, அவர்கள் ரூ. 450 திருடிக்கொண்டு சென்றுவிட்டதாயும், பின் தான் போலீசில் புகார் செய்ததாயும் சிவராம பேட்டையைச் சேர்ந்த கடைக்காரர் ஒருவர் கூறினர். அதன் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரித்து வந்தனராம்.

இந்தியாவில் உருக்கு உற்பத்தியும் இறக்குமதியும்

இந்தியாவில், 1954-ம் ஆண்டில், மொத்தம் 12·4 லட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்யப்பட்டது என்றும், அவ்வாண்டில் இறக்குமதியான உருக்கின் மொத்த அளவு 3 87,401 டன் என்றும் டில்லி மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் புயலா ?

"வடகொரியாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் தங்கள் படைபலத்தைப் பெருக்கி வரும் நிலைமையைச் சமாளிக்க வழி செய்யும் வகையில் கொரியா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை நிராகரிப்பது பற்றி பரிசீலனை செய்யும்படி தனது நேச நாடுகளையெல்லாம் அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளதாம்.

ஆயுள் வளர!

"மனிதன் சாதாரணமாக 150 முதல் 175 வயது வரை வாழலாம்; கவலைதான் மனிதனுக்கு விரைவில் கிழத்தனம் உண்டுபண்ணிவிடுகிறது,"

என்று பிரபல ரஷ்ய விஞ்ஞானியான எர்ஸின் தெரிவித்திருக்கிறார்.

மனிதன் நெடுநாட்கள் வாழ்வதற்குத் தேவையானவை என்ன என்பது பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

1. மனிதன், தான் செய்கின்ற வேலைகளை 'புத்திசாலித்தன'மாக அமைத்துக் கொள்ள வேண்டும்.
2. அளவுக்கு மீறின வேலை செய்வது கூடாது.
3. விடுமுறை நாட்களில் நன்றாக ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும்.
4. நடுத்தர வயதில் தினம் ஒன்றுக்கு 8-மணி நேரம் தூங்க வேண்டும்.
5. நாளொன்றுக்கு 10 முதல் 20 நிமிட நேரம் வரையிலும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.
6. தினமும் அளவு மீறாமல் சாப்பிட வேண்டும்—மூன்று அல்லது நான்கு முறை சாப்பிட வேண்டும்.
7. மது அருந்தவோ, புகை பிடிக்கவோ கூடாது.
8. தினமும் நன்றாகக் குளித்து உடம்பைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்; சுத்தமான காற்றில் நன்றாக உலவ வேண்டும்

மேற்கண்ட இம்முறைகளை ஒருவன் தவறாது கடைப்பிடித்து வருவானானால் அவன் நிச்சயம் நெடுநாட்களாக உயிரோடு இருப்பான் என்று அவர் குறிப்பிடுகிறார்.

தாய் மொழியில் கல்வி

யாழ்ப்பாணம், மார்ச் 22—

'படிப்பில் சுத்த மோசம்' என்று ஆரம்பம் முதற்கொண்டே கருதப்பட்ட எத்தனையோ மாணவர்கள், பள்ளிகளில் தமிழ் மொழி போதனா மொழியானதும், தமிழ் மொழியில் விஞ்ஞானம், கணிதம், சரித்திரம் போன்ற பாடங்களில் முதலிடம் பெற்றதைக் கண்டு தாம் பெரிதும் ஆச்சரியப்பட்டதாகவும், ஆங்கில மொழியில் பாடங்களைப் போதித்தவர்கட்கு அதைத் தமிழ் மொழியில் போதிப்பது உண்மையிலேயே சங்கடந்தான் என்றாலும், உயர் வகுப்புகட்கு சகல பாடங்களையும் தமிழிலேயே பயிற்றுவிக்க முடியும் எனத் தாம் நம்புவதாகவும் இங்குள்ள யூனியன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட சென்னை பிஷப் டேவிட் செல்லப்பா குறிப்பிட்டிருக்கிறார்.

தேயிலைத் தொழிலாளருக்கு கூலி உயர்வு

இலங்கை அரசாங்கம் தர மறுக்கிறது

கொழும்பு, மார்ச் 21—

சட்ட பூர்வமாக நியமனம் பெற்ற, தேயிலை கூலி நிர்ணய 'போர்டு' சிபாரிசு செய்திருந்த 25 சதவிகித கூலி உயர்வை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

தேயிலை விலை இப்போது இறங்குமுகத்தில் இருப்பதால், கூலி உயர்வு தர இயலாதென சர்க்கார் கருதுகிறதாம்.

5 லட்சம் தேயிலைத் தொழிலாளர்களுக்கு பயன்தரக்கூடிய இந்த சிபாரிசினை அமுல் நடத்தினால் தினம், தேயிலை முதலாளிகள் ரூ 75 ஆயிரம் அதிகம் செலவிட வேண்டிவரும் என்றும் சர்க்கார் கூறுகிறது.

எதில்தான் இலாபமில்லை?

தூத்துக்குடியில் முத்துக்குளிப்பதின் மூலம் சர்க்காருக்கு 3 முதல் 4 லட்சம் ரூபாய் வரையில் இலாபம் கிடைக்கும் என்று சென்னை விவசாய அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

தி.மு.க. கிளைகள் தேர்தல் நடத்தும் முறை

27—3—55 ஞாயிறன்று தேர்தல் நடத்தும் சிற்றூர்—பேரூர்—நகர—சென்னை வட்டக் கிளைகள் கீழ்க்கண்ட முறையில் தேர்தல் நடத்த வேண்டும் :—

1. சிற்றூர் — பேரூர் — நகரம் —சென்னை வட்டம் ஆகிய பகுதிகளின் தி. மு. கழகத்தைச் சார்ந்த சாதாரண உறுப்பினர்கள், அந்தந்தப் பகுதியில், அந்தந்தக் கிளைகளின் செயலாளர் குறிப்பிடும் இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றுகூட வேண்டும்.
2. சென்னையைப் பொறுத்த வரையில், மாவட்டச் செயலாளர் நியமிக்கும் ஆணையாளர்கள், குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட வட்டக் கிளைகளின் தேர்தலை நடத்தி வைப்பார்கள்; இறுதி வரையில் அவர்களே தேர்தல் ஆணையாளராக இருந்து நடத்தி வைப்பார்கள்.
3. பிற மாவட்டங்களில் தலைமைக் கழகத்தாலோ அல்லது அந்தந்த மாவட்டக் கழகத்தாலோ நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளரின் கீழ், கிளைகளின் தேர்தல் நடைபெற வேண்டி இருந்தால், அந்த ஆணையாளர்களே இறுதி வரையில் தேர்தலை நடத்தி வைப்பார்கள்.
4. தலைமைக் கழகத்தாலோ அல்லது மாவட்டக் கழகத்தாலோ ஆணையாளர் நியமிக்கப்படாத பிற சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகளின் தேர்தலை அந்தந்தக் கிளைகளின் நடமுறைச் செயலாளரே துவக்கி வைப்பார். நடைமுறைச் செயலாளர் போட்டி போடுபவராக இருந்தால், கூட்டத்தில் பெரும்பான்மையோரின் விருப்பத்தைப் பெற்ற ஒருவர் தேர்தலைத் துவக்க வேண்டும்.
5. முதலில் செயலாளர் தேர்தல் நடைபெற வேண்டும்; செயலாளர் தேர்தலில் எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும்.
6. செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் கூட்டத்திற்குத் தலைமை வகித்துத் தொடர்ந்து தேர்தலை நடத்த வேண்டும்.

[துணைச் செயலாளர்—பொருளாளர் — செயற்குழு உறுப்பினர்—மாவட்டப் பிரதிநிதி ஆகிய பதவிகளில் எதிலும் நிற்காத ஒருவர் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கக் கிடைப்பது பெரும்பாலும் அரிதாக இருக்குமாதலால், தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் தொடர்ந்து நடைபெற வேண்டிய தேர்தலை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.]

7. பின், துணைச் செயலாளர் தேர்தல் நடைபெற வேண்டும்; எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும.
8. பின், பொருளாளர் தேர்தல் —எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும்.
9. பின், செயற் குழு உறுப்பினர்கள் தேர்தல்—குறைந்த அளவு 8 உறுப்பினர்களிலிருந்து அதிக அளவு 18 உறுப்பினர்கள் வரையில் (செயலாளர்—துணைச் செயலாளர் — பொருளாளர் தவிர்த்து) தேவையான அளவு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
10. எந்தப் பதவிக்கு யாரை நிறுத்துவதாக இருந்தாலும், உறுப்பினர் ஒருவர் முன்மொழிய மற்றொருவர் வழிமொழிய வேண்டும். செயலாளர் — பொருளாளர் — துணைச் செயலாளர் தேர்தலில், தனித்தனியே, ஒரு உறுப்பினர் ஒருவரைத்தான் முன் மொழியவோ, வழிமொழியவோ செய்ய வேண்டும்.
11. செயற் குழு உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் தேவைப்படுகின்றனரோ, அவ்வளவு பேர்களின் பெயர்கள், ஒவ்வொன்றாக ஒரு உறுப்பினரால் முன்மொழியப்பட்டு மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பட வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும், தேர்தெடுக்கப்படவேண்டிய செயற் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவோ, அதே அளவு தடவைதான், முன்மொழியவோ, வழிமொழியவோ (இரண்டும் சேர்த்த அளவு) செய்யலாம்; ஆனால், தனித்தனியாகச் செய்ய வேண்டும்.
12. தேர்தலில் போட்டி இருந்தால், போட்டியிடுபவர்களின் பெயர்கள் கரும்பலகை ஒன்றில் எல்லோருக்கும் தெரியும்படி அகரவரிசையில் எழுதப்பட வேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று குறிக்கப்பட வேண்டும்.
13. கிளைக் கழகத்தின் முத்திரையோ அல்லது கூட்டத் தலைவர் குறிப்பிடும் முத்திரையோ இடப்பட்ட வெள்ளைத்தாள்கள், வாக்குரிமைச் சீட்டாகப் பயன்படுத்தப்படும்.
14. உறுப்பினர்கள், தாம் தேர்ந்தெடுக்க விரும்புபவர் அல்லது விரும்புபவர்களின் பெயரை அல்லது பெயர்களை அந்தத் தாளில் தெளிவாக எழுதி, வாக்குரிமைச் சீட்டைப் போடுவதற்கு என்று வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடவேண்டும்.
15. மிகவான எண்ணிக்கை பெற்றோரே தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். தலைவர், போட்டியிடாதவர்களில் தேவையான பேர்களை உடன் வைத்துக்கொண்டு வாக்குகளை எண்ணவேண்டும்.
16. எந்த ஒரு பதவிக்காவது, போட்டியிடும் இருவருக்குச் சமமான வாக்குகள் பதிவானால், சீட்டு குலுக்கிப் போட்டுத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
17. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால், தேர்தல் நடைபெற்ற ஒரு திங்களுக்குள் மாவட்டக் கழகத்தின் மூலம் தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பித்துக் கொண்டு நீதி கோரலாம்.
18. பிறவற்றிற்கு, "தி. மு. க. கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை"யைக் கண்டு கொள்க.

சி. என். அண்ணதுரை
பொதுச் செயலாளர்

"அறிவகம்" சென்னை.
22—3—55

பஞ்சாப் கல்வி மந்திரிமீது லஞ்சக் குற்றம்

இலாகா பொறுப்பிலிருந்து விலகியுள்ளார்

சாந்திகார், மார்ச் 23—லாலா ஜகத் நாராயண் என்ற பஞ்சாப் மாநில மந்திரி தமது கல்வி இலாகா பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறாராம்.

அவர், தன்மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள லஞ்சக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக, எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் தரவே அவ்வாறு பதவியிலிருந்து விலகிக்கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

முதன் மந்திரி, அவரது கல்வி இலாகா பொறுப்பை தற்போது மேற்கொண்டிருக்கிறார்.

அவர் ஏற்கனவே கல்வி இலாகாவுடன் சேர்த்து நிர்வகித்துவந்த சுகாதாரம், போக்குவரத்து இலாக்காக்களை தொடர்ந்து ஏற்று நிர்வகித்து வருவார் என்றும் கூறப்படுகிறது.

கல்வி இலாகா பொறுப்பிலிருந்து அவர் மீதுள்ள தங்கள் லஞ்சக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக, அவரை விலக்க வேண்டுமென்று சென்றவாரம் சட்டசபையில் எதிர்க்கட்சியினர் கோரியிருந்தனர். அதன் எதிரொலியாகவே லாலா ஜகத் நாராயண், மேற்கண்ட நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறாராம்.

கல்வி மந்திரி மீது கொண்டுவரப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் காட்டினால் அவை குறித்து, விசாரிக்க தாம் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கத் தயாராக இருப்பதாயும், அந்த ஆதாரங்களைக் கூற எதிர்க்கட்சியினரும் ஒரு குழு அமைக்கவேண்டும் என்றும் சட்டசபையில் முதன் மந்திரி கூறியிருந்தார்.

அதற்கொப்ப, அகாலி கட்சித் தலைவர் சர்தார் கோபால் சிங் கால்சா, தாங்கள் ஒரு குழு நியமித்துள்ளதாயும், அரசாங்கம் நியமிக்கும் விசாரணைக் குழுவிற்கு தங்கள் குழு உதவியாயிருக்கும் என்றும் கூறியதுடன், ஒரு அறிக்கையை சபையில் தாக்கல் செய்தார்.

ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி கொண்ட விசாரணைக் குழு அந்த லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்குமென முதன் மந்திரி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அந்த விசாரணைக் குழுவிற்கு எதிர்க்கட்சி உபகுழு உதவியாக இருக்குமென்றும் அந்த அறிக்கையில் காணப்பட்டிருந்தது.

எண்ணெய் ஆலையில் வேலை நிறுத்தம்

ஏழு வாரங்களாக திரு-கொச்சியில் நடைபெறுகிறது

கடந்த ஏழு வாரங்களாக டாடா எண்ணெய் ஆலைத் தொழிலாளர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தக் கிளர்ச்சியை நிறுத்துவதற்காக காங்கிரஸ் பொதுக் காரியதரிசி கே. பி. மாதவன் நாயர் முயற்சித்து வருவதாகத் தெரிகிறது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் ஆலை எல்லைக்குள் வசிப்பவர்களுக்குத் தேவையான பால், மளிகைச் சாமான்கள் முதலியவை தரப்படுவதைக்கூட தடுக்க முற்படுவது குறித்து அவர் வருத்தம் தெரிவித்ததுடன், அவர்களது செய்கை தவறானது என்றும் குறிப்பிட்டாராம்.

ஏ. ஆர். தாமஸ் என்ற மக்கள் சபை உறுப்பினரையும், ஓ ஆர். சும்மாரி என்ற சட்டசபை உறுப்பினரையும் ஆலைக்குள் செல்லக்கூடாதென தொழிலாளர் சங்கத்தவர் தடுத்து நிறுத்திய சம்பவம் குறித்தும் காங்கிரஸ் காரியதரிசி விசாரிப்பதாகக் கூறியிருக்கிறார்

போக்குவரத்து நிலை— புதிய பரிசீலனை

இவ்வாண்டு இறுதியில் சென்னை நகரில் உள்ள பஸ் போக்குவரத்து நிலைமையை சர்க்கார் அடியோடு புதிதாகப் பரிசீலிக்குமென்றும், இப்பரிசீலனையால் இப்போதுள்ள நிலைமையைக் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கச் சாத்தியமாக இருக்கும் என்றும் போக்குவரத்து அமைச்சர் பரமேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

அன்று அவர்கள்! இன்று இவர்கள்!

ராஜ்கோட், மார்ச் 23—சௌராட்டிர மாநிலத்தில் கைத்தறித் தொழிலை நவீன மயமாக்குவதற்கென சென்னை, ஆந்திரா, மலபார் ஆகியவற்றைச் சேர்ந்த 3 நிபுணர்கள் அங்குசென்றுள்ளனராம்.

ஏறத்தாழ 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு முன்னர், சௌராட்டிர மாநிலத்தைச் சேர்ந்த திறமைமிக்க நெசவாளர்கள் பலர் சென்னை மாநிலத்தில் குடியேறினதாகவும், இப்போது அதற்குப் பிரதிபுபகாரமாக சென்னை, ஒரு நிபுணரை அங்கு அனுப்பியிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

தோழர் இராகவன் மறைவு

சென்னை திருவல்லிக்கேணி தி.மு. கழகத் தோழர் ஆர். இராகவன், 21—3—55 திங்கள் இரவு சுமார் 7 மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தோழர் இராகவன் அவர்கள் ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து 15—7—53 அன்று நடைபெற்ற மறியலில் ஈடுபட்டு சிறை சென்றவராவார்.

24 வயது நிரம்பிய அவர், 29 நாட்கள் சிறைத் தண்டனையை முடித்துவிட்டு—சிறை தந்த பரிசான காச நோயுடன் வெளியேறினார். நோயுற்றிருந்த அவரைக் குணப்படுத்த திருவல்லிக்கேணி தி. மு. கழகத்தவர் கடந்த இரண்டாண்டுகளாக முயற்சி செய்தும் பலனின்றி, மரணமுற்றார்.

மறைந்த தோழருக்கு மரியாதை செய்யும் வகையில் திருவல்லிக்கேணி (42-வது வட்டம்) தி. மு. கழக இல்லம் மூடப்பட்டதுடன், கழக இல்லில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடியும் சிறிது தாழ்த்திப் பறக்கவிடப்பட்டது.

22—3—55 மாலை 4 மணிக்கு அன்னாரது சவ அடக்கம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் கறுப்புச் சின்னமணிந்து கொண்டு சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

சவ ஊர்வலம் இடுகாடு வந்தடைந்ததும் தோழர் நீல நாராயணன் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர்கள் அரங்கசாமி, இளம்பரிதி, ஆர். டி. அரசு ஆகியோர் அனுதாபம் தெரிவித்துப் பேசினர்

அன்னாரை இழந்து பரிதவிக்கும் அவரது பெற்றோருக்கும், உற்றார் உறவினருக்கும் 42-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுவதுடன், எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் உரித்தாக்குகிறோம். (ஆ.-ர்.)

கழகக் கூட்டங்கள்

சென்னை
தண்டையார்பேட்டை,
சேனியம்மன் கோயில் திடலில்
26—3—55 மாலை 5½ மணிக்கு
தலைவர்: பொ. சம்பந்தன்
பேசுவோர்:
கண்ணதாசன்
வளவன்
டி. என். இராவணன்
கபிலன்

இராயநல்லூர்
தி. மு. கழக முதலாவது ஆண்டு விழா
வ. உ. சி. திடலில்
26—3—55 மாலை 4 மணிக்கு
தலைவர்: கே. ராமு
பேசுவோர்:
என். வி. நடராசன்
எல். என். இராமலிங்கம்
கே. ரஹ்மத்துல்லா
இரா. பாலகுருசாமி

கோதைமங்கலம்
அழகிரி திடலில்
26—3—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: பி. ஏ. அங்கப்பன்
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

அம்மாசத்திரம்
தி. மு. கழக துவக்க விழா
26—3—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: கே. கே. நீலமேகம்
பேசுவோர்:
தில்லை வில்லாளன்
பொ. சோக்கலிங்கம்
டி. ராமசாமி

25—3—55 மாலை, நெய்க்காரபட்டியில் (பழனி வட்டம்) தோழர் ஆர். எஸ். மணி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் தோழர்கள் ப. நாராயணன், சொ. துரையரசு ஆகியோர் பேசுவர்.

* * *

காங்கயநல்லூரில் நடைபெறும் கூட்டத்தில் தோழர்கள் ஆ. மணி எழிலன், வே. அ. இளஞ்செழியன் க. நெடுஞ்சோழன், வே. சு. பாண்டியன், கரிகாலன், கோ. கிருட்டிணன், தேசியமணி அம்மையார் ஆகியோர் பேசுவர். (தேதி குறிப்பிடப்படவில்லை)

சௌந்திரபாண்டியனார் நினைவுப்படிப்பக முதலாவது ஆண்டு விழா

25-3-55 மாலை 6 மணிக்கு, சென்னை, சூளை, சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில், சூளை சௌந்திரபாண்டியன் நினைவுப் படிப்பக முதலாவது ஆண்டு விழா தோழர் மு. மாசிலாமணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், ஏ. கே. வில்வம் ஆகியோர் பேசுவர்.

ஐக்கநதி வார விழா

25—3—55 மாலை 7 மணிக்கு குன்றத்தூர், பெரிய தெருவில், குன்றத்தூர் கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில், மேற்படி விழா தோழர் டி. என். சம்பந்தம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், எம். எஸ். அப்துல் மஜீத் ஆகியோர் பேசுவர்.

க. அன்பழகன்
சுற்றுப்பயணம்
மார்ச் 25: மதுரை (திருமணம்)
26: திருத்துறைப்பூண்டி (தி. மு. க. பொதுக் கூட்டம்)
27: மாயூரம்
காலை: ஆண்டு விழா;
மாலை: பொதுக் கூட்டம்

விருந்தில் மதுவருந்திய நீதிபதி

சூரத்தில் கைது செய்யப்பட்டார்

சூரத் நகர முதல் வகுப்பு நீதிபதியான என். கேசவசிங் என்பார் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ்கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஜனவரி 23-ந் தேதியன்று மதுவிலக்கு போலீசார் கோசத் எனும் கிராமத்தை திடீர் சோதனையிட்டபோது, அங்கு ஒரு விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்ததாயும், இரு நீதிபதிகள், மூன்று பிரபல டாக்டர்கள், ஒரு கிராம போலீஸ் அதிகாரி ஆகியோரும், மற்றும் சிலரும் அங்கு சாராயம் குடித்துக்கொண்டிருந்ததைக் கண்டுபிடித்து, அது சம்பந்தமாக அந்த 6 பேர்களையும் கைது செய்திருக்கின்றனர்.

உயர்நீதிமன்றத்தின் அனுமதி ஏற்கனவே பெறப்படாததால் அவர்களை உடனடியாக அந்த இடத்திலேயே கைது செய்ய முடியாமற் போய்விட்டதென்றும், பின்னர், உயர்நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டு, இரு நீதிபதிகளில் ஒருவரான கேசவசிங்கைக் கைது செய்திருக்கின்றனரென்றும் கூறப்படுகிறது.

மற்றொரு நீதிபதி தற்போது சூரத்தில் இல்லையாதலால் அவர் மீது நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

கூண்டோடு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் புகுத்த விரும்புகிற ஒரு கட்சி சர்வாதிகாரம் தானே நாட்டிலே நிலவும்? அந்த நிலைமையைப் பெரியார் விரும்புகிறாரா? திராவிடர்களின் அரசியல் பிரச்சினையை அடியோடு இழந்துவிட வேண்டியதுதானா?—என்பன போன்ற பிரச்சினைகளைப்பற்றி, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் பெரியாரிடம் பேசி, அவர் கருத்தை அறிய விரும்பினர்.

பெரியார், தேர்தலின்போது காட்டும் அக்கரையைப் பிறகு விட்டுவிடுகிற போக்கையும், திராவிடர் கழகத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு காட்டாத தன்மையையும், தேர்தலின்போது காங்கிரசை எதிர்த்து வெற்றிபெற்று, பிறகு, சொந்த இலாபத்துக்காகக் காங்கிரசோடு கலந்துவிடுவதையும் எடுத்துக் காட்டிக் கண்டித்தார்.

திராவிட பார்லிமெண்டரி கட்சியினர், 'அப்படியானால், இப்போதுள்ள நிலைமையில் நாங்களும் கூண்டோடு காங்கிரசில் சேர்ந்துவிடலாமா?'—என்று கேட்டனர்.

பெரியார் அவர்களின் ஆதரவு தங்களுக்கு எப்படியும் தரப்பட வேண்டும் என்பதையும், காங்கிரசை—ஒரு கட்சி சர்வாதிகாரம் நடத்தவிடக்கூடாது என்பதையும் மீண்டும் வலியுறுத்திக் கூறினர்.

பெரியார், யோசித்துத் தமது கருத்தை அளிப்பதாகக் கூறி, '26-ந் தேதிக்கு மேல் மீண்டும் சந்திக்கலாம்,' என்று கூறி அனுப்பிவிட்டார்.

மீண்டும் பெரியாரைச் சந்தித்து, இந்தப் பிரச்சினைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான முடிவு காணப் போவதாக நமது நிருபரிடம், பெரியாரிடம் தூது சென்றவர்களில் ஒருவர், நம்பிக்கையுடன் தெரிவித்திருக்கிறார்.

"பெரியாரை விட்டால் எங்களுக்கு யார் துணை—எங்களை ஆதரிக்காமல் பெரியாருக்கு வேறு யாரை ஆதரிக்க மனம் வரும்?" என்று பாசத்தோடு அவர் கூறினார்.

"கடைசிவரையில் முயற்சி எடுத்துப் பார்ப்பது; முடியவில்லையானால், காங்கிரசிலேயே சேர்ந்து விடுவது; அப்போது, பெரியாருடைய ஆதரவும், காமராசர் ஆதரவும் சேர்ந்து கிடைக்கும்,"—என்று, திராவிட பார்லிமெண்டரி கட்சியினரில் சிலர் கருதுகிறார்கள்.

திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் 'ஒன்றுபடுத்துவது' என்பதுபற்றி, திராவிட பார்லிமெண்டரி கட்சியினர் செய்யும் முயற்சி பற்றி தி. மு. க. பொதுச்செயலாளர் கேட்கப்பட்டபோது, "பத்திரிகையில் செய்தி பார்த்தேன்; வேறேதும் அறியேன்," என்று கூறிவிட்டு, "திராவிட பார்லிமெண்டரி கட்சியினர், இந்த 'ஒன்றுபடுத்தும்' வேலையைக் கவனிப்பதைக் காட்டிலும், எதிர்கால அரசியல் நிலைமை குறித்து பெரியாருடன் 'ஒருமித்த' கருத்துக்கு வர இயலுகிறதா என்பது பற்றிக் கவனிப்பது நல்லது," என்று கூறினார்.

எந்தக் காரணம் கொண்டோ, பெரியாருக்கும் — திராவிட பார்லிமெண்டரி கட்சியினருக்கும் 'குடும்பப் பாசம்' ஏற்பட முடியாமல் போய்விட்டால், ஏற்கனவே 'பாக்கியவான்' ஆக விளங்கும் காமராசருக்கு மேலும் 'யோகம்' அடிக்கும் என்றுதான் தெரிகிறது; பெரியாரும் எங்களைக் கைவிட்டுவிட்டால்—காங்கிரசை அவர் ஆதரிப்பது என்பது நீண்டகால திட்டமாகிவிட்டால், நாங்கள், காங்கிரசிலே சேர்ந்து காமராசரின் அன்பையும், பெரியாரின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் வழியைப் பார்க்கவேண்டியதுதான்,"

என்று கருதுபவர்கள் திராவிட பார்லிமெண்டரி கட்சியில் இருக்கிறார்கள்.

தி. மு. கழக கிளைத் தேர்தல்

27-3-55 காலை 10 மணிக்கு, மதுரை நகர் தி. மு. கழக கிளைத் தேர்தல், மதுரை, அழகரடி ஆச்சி மடத்தில் நடைபெறும்.

* * *

27-3-55 காலை 10 மணிக்கு, திருச்சி, கருணாநிதி பார்க்கில், திருச்சிநகர தி. மு. கழக தேர்தல் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பம்பாய், மார்ச் 23—பம்பாய் நகரின் சில குறிப்பிட்ட பகுதிகளில் இரவு 10 மணி முதல், மறுநாள் காலை 6 மணி வரையிலும் எவ்வித அரவமும் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.